# ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி. கோணேஷ்

## ஆழத்து முத்துக்கள் 86

தமிழக சினிமாப் பாடல்களையும், ஹிந்திப் பாடல்களையும் மேடையில் இசைக்குழுக்கள் பாடிவந்த காலகட்டத்தில் தாங்களே பாடல்களை எழுதி, மெட்டமைத்து, தாங்களே பாடிக்கொண்டு மேடையில் மெல்லிசைக் கச்சேரிகளை நிகழ்த்தியவர்கள் பரமேஸ் - கோணேஷ் மெல்லிசைக் குழுவினர். திருகோணமலையைத் தளமாகக் கொண்டிருந்த இந்த சகோதரர்கள் இலங்கையில் தமிழர்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் மெல்லிசை நிகழ்ச்சிகளை நடாத்திப் பேரும் புகழும் பெற்றனர்.

1969இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தினகரன் விழாவின் போது திறந்தவெளி அரங்கில் பரமேஸ் - கோணேஷின் மெல்லிசை நிகழ்ச்சியைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. வெள்ளை நிற உடையணிந்த 24 இளைஞர்கள் மெல்லிசையை அருவி போல் கொட்டினர். நல்ல கருத்தான பாடல்கள், புதுமையான மெட்டு, புதிய இசை என்று முதன் முறையாக எமது உணர்வோடு கலந்து விடும் பாடல்களை நாம் மேடையில் கேட்டோம்.

*'உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது*
*எனக்குத் தெரியுமா நீ என்னை அழைப்பது...'*

*'போகாதே தூரப் போகாதே*
*தாங்காதே நெஞ்சம் தாங்காதே...'*

*'நீ வாழும் இடம் எங்கே*
*எந்தன் பார்வை விழும் அங்கே...'*

போன்ற பல மெல்லிசைப் பாடல்களை அன்றைய நிகழ்ச்சியில் பாடினர். பெரும்பாலான பாடல்களை எழுதியதோடு அல்லாமல் அவற்றை எல்லாம் மேடையில் திறம்படப் பாடியவர் இவர்களில் மூத்தவரான பரமேஸ் அவர்கள். அனைத்துப் பாடல்களுக்கும் புதுமையாக மெட்டுக்கள் அமைத்தவர் கோணேஷ் அவர்கள்.

தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் மாரிமுத்து பீதாம்பரம் கோணேஸ்வரன் என்ற எம்.பி. கோணேஷ் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தையார் பீதாம்பரம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கோணேஷ் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்றார். அந்நாட்களில் அங்கு புகழ்பெற்ற சங்கீத பூஷணம் விநாசித்தம்பி அவர்களிடம் முறைப்படி சங்கீதத்தை கோணேஷ் பயின்று கொண்டார். பின்னர் திருகோணமலை புனித

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

யோசெப் கல்லூரியின் அதிபராக இவரது தந்தையார் மாற்றலாகிச் சென்ற போது அவரது குடும்பம் திருகோணமலைக்கு இடம் பெயர்ந்தது.

புனித யோசெப் கல்லூரியில் பயின்ற நாட்களில் நிலாவெளியில் அமைந்துள்ள கோயில் ஒன்றில் கோணேஷ் எக்கோடியன் வாத்திய இசை வழங்க பரமேஸ் பக்திப் பாடல்களைப் பாடினார். இவ்வாறு ஒருநாள் திருக்கேதீஸ்வரக் கோயிலில் பாடும் சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிட்டியது. பாடலை ஒழுங்கு செய்தவர்கள் திருகோணமலை பற்றிய ஒரு பாடலை இயற்றிப் பாடுமாறு வேண்டிக்கொண்டனர். அவர்களது வேண்டுகோளை நிறைவேற்றிப் பாடிய பாடல் தான்...

*'திருக்கோணமலை எங்கள் நாடே*
*திருக்கோணேஸ்வர் குடிகொண்ட திருநாடே...'*

கோணேஷ் இசையமைக்க பரமேஸ் எழுதிப் பாடிய இந்தப் பாடல் அமோக வரவேற்பைப் பெற்றதோடு இவர்களது கலைவளர்ச்சிக்கு மூலமாகவும் அமைந்து போனது. இந்தப் பாடலின் வெற்றியைத் தொடர்ந்து...

*'யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது*
*வேலேந்தும் நல்லூர்க் கந்தன் குடிகொண்டது...'*

*'மீனிசை பாடி வரும் தேனருவி ஓடி வரும்...'*

போன்ற தமிழ் நகரங்களின் சிறப்புகளைப் பாட்டாகப் பாடினர். இவ்வாறு இவர்களது



இசைப் பயணத்துக்கு ஊக்கம் கொடுத்து ஆதரவு அளித்து வளர்ச்சிக்கு மூலாதாரமாக விளங்கியவர் இவர்களது தந்தையார் பீதாம்பரம் அவர்களே.

1968இல் கொழும்பில் இடம்பெற்ற ஒரு நாடகத்துக்கு இசை வழங்க வந்திருந்த பரமேஸ் கோணேஷ் அவர்கள் இலங்கை வானொலிக் கலைஞர்களாக விளங்கிய விமல் சொக்கநாதன், யோகா தில்லைநாதன் அவர்களது வீட்டில் தங்கியிருந்தனர். அவர்கள் கேட்டதற்கு இணங்க உடனடியாக இசையமைத்துப் பாடிய பாடலே *'உனக்குத் தெரியுமா...'* என்ற பாடலாகும்.

இதனது தொடர்ச்சியாக S.P. மயில்வாகனம் அவர்களின் தொடர்புகள் காரணமாக சிங்கப்பூர் சென்று அங்கு பல மெல்லிசைப் பாடல்களைப் பதிவு செய்தனர்.

*'எழுதுகிறேன் பாட்டு...'*

*'அழைக்கும் ஓசை கேட்கலையா...'*

*'நீ இன்றி நிலவு...'*

*'தேனாடும் பூவில்...'*

போன்ற புகழ்பெற்ற பாடல்கள் அங்கு பதிவு செய்யப்பட்டன. பரமேஸ் அவர்களுடன் ஈ.ஆர். பிரேமா, கே.ஆர். கமலா, கலாவதி சின்னச்சாமி மற்றும் சிலரும் இணைந்து இந்தப் பாடல்களைப் பாடியிருந்தனர்.

இலங்கை வானொலியில் தமிழ் மெல்லிசை, பொப்பிசைப் பாடல்கள் எதுவும் ஒலிபரப்பப்படாத நாட்களில் இவர்களது பெரும் முயற்சியாலும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் செ. இராசதுரை, மு. சிவசிதம்பரம் ஆகியோரின் நடவடிக்கைகள் காரணமாகவும் முதன் முறையாக ஒரு தமிழ்ப் 'பொப்' பாடல் இலங்கை வானொலியில் ஒலித்தது. பரமேஸ் கோணேஷ் அவர்களது *'தக்காளிப் பழத்துக்கும் தளதள உடம்புக்கும்...'* என்ற பாடலே அது. இதனைத் தொடர்ந்து *'மன மாளிகை ரோஜா...'*, *'நெஞ்சைத் தொட்டுப் பேச வந்த...'* போன்ற பல பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பாகின. இந்தப் பாடல்களை கொழும்பில் இருந்த லூயிஸ் பிறவுன் ஸ்டுடியோவில் இவர்கள் பதிவு செய்தனர்.

1976 - 80 காலத்தில் இலங்கை வானொலிக் கலையகத்தின் பகுதிநேர வாத்தியக் கலைஞராக விளங்கிய எம்.பி. கோணேஷ் 1980 இல் இசை அமைப்பாளராகப் பதவி பெற்றார். இவரது பதவிக் காலத்தில் ஏறத்தாள 200 மெல்லிசைப் பாடல்களுக்கு இவர் இசை அமைத்திருந்தார். கதிர் சுந்தரலிங்கம், அமுதன் அண்ணாமலை, பொன். சுபாஸ் சந்திரன், ஏ.ஈ. மனோகரன், எஸ். இராமச்சந்திரன் போன்ற பாடகர்கள் பாடியிருந்தனர்.

1983இல் ஜெர்மனிக்குக் குடிபுகுந்த பின்னர் அங்கு கலை பண்பாட்டுக் கழகத்தினருக்காக நடாத்திய இசை நிகழ்ச்சிகள் தன் வாழ்நாளில் மறக்க முடியாதவை என்று குறிப்பிடும் எம்.பி கோணேஷ் அவர்கள் தன் இசைப்பயணத்தில் அது ஒரு பொற்காலம் என்று கூறுகிறார். இருபதுக்கு மேற்பட்ட வேற்றினத்து இசைக்கலைஞர்களை இணைத்து 35 இசை நிகழ்ச்சிகளை அவர் அங்கு நடத்தியிருந்தார்.

*'என்று தெரியும் இந்த...'*

*'வாருங்கள் தமிழர்களே...'*

*'எங்கள் கொள்கை தமிழீழம்...'*

*'புறப்படு மகனே...'*

*'கோட்டையிலே செங்கொடி...'*

*'தமிழீழ மண்ணிலே போர்...'*

போன்ற புகழ்பெற்ற பல விடுதலைப் பாடல்களுக்கு கோணேஷ் இசை அமைத்திருந்தார். இந்தப் பாடல்களை எம்.பி. பரமேஸ், கண்ணன், பாலசந்திரன் மற்றும் பல முன்னணிப் பாடகர்கள் பாடியிருந்தனர்.

ஜெர்மனியில் இருந்த நாட்களில் கோணேஷ் 'அரங்கேற்றம்' என்ற பாடசாலையை ஆரம்பித்து பாடசாலைக் கல்வி, இசை, நடனம் ஆகியவற்றைப் போதித்தார். ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ் கல்விக்கூடம் இதுவே.

1990இல் கனடாவுக்குக் குடிவந்த பின்னர் இங்கும் பல மெல்லிசைப் பாடல்களை உருவாக்கினார். மேலும் 'தேமதுரத் தமிழோசை உலகெங்கும் கேட்க வேண்டும்' என்ற அளவில்லாத ஆசையில் 'ரேடியோ தமிழ்' என்ற தினமும் இரு மணி நேர தமிழ் வானொலி நிகழ்ச்சியை கனடாவில் ஆரம்பித்தவர் கோணேஷ் அவர்கள். 5:30 AM அலைவரிசையில் தினமும் இரவு 8 இலிருந்து 10 மணி வரை இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

கனடாவில் 24 மணிநேர தமிழ் தொலைக்காட்சியையும் ஆரம்பித்தார் கோணேஷ் அவர்கள். ITBC என்ற இந்தத் தமிழ் தொலைக்காட்சி 2001இல் ஆரம்பிக்கப்பட்டு சில காலங்கள் ஒளிபரப்பை நடத்தியது.

தற்போது சர்வதேச தமிழ் வானொலி என்ற ITR வானொலி நிகழ்ச்சியை கோணேஷ் நடத்தி வருகிறார். சிறப்பலைவரிசை (89.3 F.M. Sub-Frequency) யில் மொன்றியல் நகரில் மட்டும் ஒலிபரப்பாகும் இது ஒரு 24 மணி நேர தமிழ் வானொலி நிகழ்ச்சியாகும்.

பிரபல்யமான வானொலி தொலைக்காட்சிக் கலைஞர் பத்மினியை மணமுடித்த கோணேஷ் அவர்களுக்கு இரு பிள்ளைகள் உள்ளனர்.

கோணேஷ் எழுதி வெளியிட்ட சர்வதேச சங்கீத சுரக்கட்டு என்ற நூல் மிகவும் புகழ் பெற்றது. மேலும் இவர்கள் பாடிய பாடல்களும் புத்தகமாக வெளிவந்துள்ளது. கோணேஷ் இசையாத்த அனைத்துப் பாடல்களும் நாத வினோதம், இசைத்தென்றல் என்ற பெயர்களில் 10 இசைத்தட்டுகளாக வெளிந்துள்ளன.

1969இல் நடைபெற்ற தினகரன் விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் ஈழத்து மெல்லிசை மன்னர் என்ற பட்டம் வழங்கப்பட்டு கோணேஷ் கௌரவிக்கப்பட்டார். மிகவும் அமைதியாகவும் அடக்கத்துடனும் பேசும் இந்தக் கலைஞர் தமிழ் மெல்லிசைக்கும் தமிழ் ஊடகத் துறைக்கு ஆற்றிய பணிகளும் சாதனைகளும் ஆச்சரியத்தைத் தருகின்றன.



sriskandan@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**